

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 100– திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 04 – செவ்வாய்க்கிழமை 19 நவம்பர் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 100 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 04 - Tuesday 19 November 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்கும் வகையில்

# நிதிப் பகிர்வு முறையை மாற்றிடுக!

## 16-வது நிதிக்குழுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 19 -

**16-ஆவது நிதிக் குழுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றும் போது, "தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்கும் வகையில் நிதிப் பகிர்வு முறையை மாற்றிடுக" என்று வலியுறுத்தினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2024) சென்னையில் நடைபெற்ற 16-வது நிதிக்குழு கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாடு அரசின் சார்பாகவும், தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும் 16-வது நிதிக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

புகழ் பெற்ற பொருளாதார அறிஞர் டாக்டர். அரவிந்த் பனகாரியா அவர்களின் சீரிய தலைமையின் கீழ் அமைக்கப்பட்டு, இன்று தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்திருக்கும் 16-வது நிதிக்குழுவின் பரிந்துரைகள், பரந்து விரிந்த இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்து இந்தியாவை உலகின் பொருளாதார வல்லரசு நாடாக மாற்றும் வகையில் அமைந்திடும் என்று நான் நம்புகிறேன்.

ஒன்றிய அரசிற்கும் பல்வேறு மாநில அரசுகளுக்கும் இடையேயான அதிகார பகிர்வு மற்றும் பொறுப்புகளை இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்கனவே வரையறுத்துத் தந்திருக்கிறது. அத்தகைய வழிகாட்டுதலின்படி நாம் கடைப்பிடித்துவரும் கூட்டாட்சித் தத்துவத்தை பின்பற்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் தமது மாநிலங்களின் உரிய தேவைகளை நிறைவேற்றுவதுடன் நாட்டின் வளர்ச்சிக்கும் உரிய பங்காற்றி வருகின்றன.

எனினும், சுகாதாரம், கல்வி, சமூகநலம் மற்றும் வேளாண்மை போன்ற துறைகளின் முன்னேற்றத்திற்கான பல முக்கியமான திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்புகளை பெரும்பாலும் மாநில அரசுகள் தான் நிறைவேற்றி வருகின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், அதற்கு மாறாக இந்த பொறுப்புகளை எல்லாம் நிறைவேற்றத் தேவையான வருவாயைப் பெருக்குவதற்கான அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் குறைவாகவே உள்ளன.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2024) சென்னையில் நடைபெற்ற 16–வது நிதிக்குழு கூட்டத்தில் உரையாற்றினார். இக்கூட்டத்தில், 16–வது நிதிக் குழுவின் தலைவர் முனைவர் அரவிந்த் பனகாரியா, உறுப்பினர்கள் அஜய் நாராயண் ஜா, திருமதி அன்னி ஜார்ஜ் மேத்யு, முனைவர் மனோஜ் பாண்டா, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், 16–வது நிதிக்குழுவின் செயலாளர் ரித்விக் பாண்டே மற்றும் நிதிக்குழுவின் உயர் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில திட்டக்குழு தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மாநில அரசுகளுக்கான வரி வருவாய் குறைப்பு!

அந்தவகையில், கடந்த 15-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய வரி வருவாய்ப் பங்கினை 41 விழுக்காடாக உயர்த்தியதை நாங்கள் உளமார பாராட்டுகிறோம். எனினும் இந்த பரிந்துரைக்கு மாறாக கடந்த 4 ஆண்டுகளில் ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 33.16 விழுக்காடு மட்டுமே மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கான வரிப் பகிர்வில் இடம்பெற்றிருக்கும் மேல் வரி மற்றும் கூடுதல் கட்டணம் ஆகியவற்றை ஒன்றிய அரசு இக்காலகட்டத்தில் பெருமளவு உயர்த்தியதே இதற்கு முக்கிய காரணம் ஆகும்.

இதுமட்டுமின்றி ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்திடும் திட்டங்களுக்கான மாநில அரசின் பங்குத்தொகை தொடர்ந்து உயர்ந்து வருவதும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் நிதி நிலையை மேலும் பாதிக்கின்றது. ஒருபுறம் ஒன்றிய அரசிடமிருந்து வரவேண்டிய வரிப் பகிர்வு குறைவதால் மாநில அரசுகளுக்கு ஏற்படும் பாதிப்புகள், மறுபுறம் ஒன்றியஅரசு அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு மாநில அரசு செலவிடும் அதிக நிதி என இரண்டுமே மாநில அரசுகளுக்குப் பெரும் சுமையை ஏற்படுத்துகின்றன.

- **முதியவர்கள் அதிகமாக வாழும் மாநிலமாக தமிழ்நாடு மாறிவரும் அபாயம்!**
- **நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அளவில் நிதி - மானியங்களை வழங்க வேண்டும்!**
- **செயற்கையாக உருவாக்கப்படும் நிதிப் பகிர்வு முறை எதிர்பார்த்த பலன்களைத் தராது!**
- **தமிழ்நாடு சந்தித்து வரும் 3 சவால்கள்!**
- **கடந்த காலங்களில் தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய தீர்வு காண்க!**

எனவே, ஒன்றிய வருவாயில் மாநிலங்களுக்கான வரிப் பகிர்வின் பங்கு 50 விழுக்காடு உயர்த்தப்படுவதுதான் முறையானதாகவும், அனைவருக்கும் ஏற்புடையதாகவும் இருக்கும் என்று நம்புகிறோம். இவ்வாறு 50 விழுக்காடு பங்கீடு வழங்கப்பட்டால் மட்டுமே மாநிலங்கள் தங்களுடைய தேவைகளுக்கேற்ப வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி நிதி மேலாண்மையில் உரிய சுயாட்சியுடன் செயல்பட இயலும்.

### 50 சதவிகித வரிப்பகிர்வை உறுதி செய்ய வேண்டும்!

எனவே, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்போடு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கு உரிய அரசியலமைப்பு சட்டத்திருத்தங்கள் வாயிலாக ஒரு உச்சவரம்பை இந்த நிதிக்குழு பரிந்துரைத்து. மாநில அரசுகளுக்கான 50 சதவீதம் வரிப்பகிர்வை உறுதி செய்திடும் என்று நான் நம்புகிறேன்.

மாநிலங்களுக்கு இடையேயான வரிப் பகிர்வினை முறைபடுத்துவதில் சமச்சீரான அணுகுமுறை தேவைப்படுகிறது. 9-வது நிதிக் குழு பரிந்துரைத்த 7.931 சதவீதத்திலிருந்து கடந்த 15-வது நிதிக் குழுபரிந்துரைப்படி 4.079 சதவீதமாக தமிழ்நாட்டிற்கான வரி பகிர்வு தொடர்ந்து வீழ்ச்சியை சந்தித்து வந்துள்ளது. நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் பல முன்னோடி நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி, செம்மையான நிர்வாகத்தை தொடர்ந்து நல்கி வரும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை தொய்வடையச் செய்து தண்டிப்பதைப் போல தற்போதைய வரிப் பகிர்வு முறை அமைந்துள்ளது என்பதை நான் சுட்டிக் காட்ட வேண்டிய நிலையில் இருக்கிறேன்.


எனவே, சமச்சீரான வளர்ச்சியையும், திறமையான நிர்வாகத்தையும் இந்த வரிப் பகிர்வு முறையில் சமக்குறிகோள்களாகக் கருதி இந்த நிதிக் குழு தனது பரிந்துரைகளை வழங்கும் என்று நம்புகிறோம். நாட்டின் சமச்சீரான வளர்ச்சியை எதிர்நோக்கும் வகையில், வளர்ச்சி குன்றிய பகுதிகளுக்குத் தேவையான நிதியை வழங்குவது அவசியம் என்றாலும் அதே வேளையில், பல்வேறுவகையிலும்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## தமிழ்நாட்டில் 6 நாட்கள் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ. 19 –

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மாலத்தீவு மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்தியப் பெருங்கடல் பகுதிகள் முதல் தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகள் வரை வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒரு சில



இடங்களில் இன்று இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இன்று (நவ.19) முதல் 23ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

## மணிப்பூரில் பயங்கர வன்முறை:

# தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை!

## வழக்குகள் மாநில காவல்துறையிடமிருந்து மாற்றம்!

புதுடெல்லி, நவ. 19 -

மணிப்பூரில் சமீபத்தில் நிகழ்ந்த வன்முறை, உயிர் இழப்புகள், பொது அமைதிக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்த முக்கிய வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பை தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ) ஏற்றுக் கொண்டுள்ளது.

இது தொடர்பான உத்தரவை உள்துறை அமைச்சகம் நவ. 16 அன்று பிறப்பித்த நிலையில், தற்போது இவ்வழக்குகள் மணிப்பூர் காவல்துறையிடம் இருந்து என்ஐஏவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

சமீபத்தில் மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் முகாமில்



தங்கி இருந்த மைதேயி சமூகத்தைச் சேர்ந்த 6 பேர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். குகி சமூகத்தைச் சேர்ந்த ஆயுதக் குழுவினர் இந்த வன்முறையில் ஈடுபட்டனர். இந்த கொலைகள் குறித்தும், வன்முறையைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள், அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் உள்ள சவால்கள் குறித்தும் தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை மேற்கொள்ளும்.

வன்முறையைக் கட்டுப்படுத்த கூடுதலாக 2,000 மத்திய ஆயுதக் காவல் படையினர் (CAPF) மணிப்பூருக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தேவைப்பட்டால் மேலும் படைகளை அனுப்பவும் உள்துறை அமைச்சகம் முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மணிப்பூரின் பாதுகாப்பு நிலை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) டெல்லியில் மூத்த அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். இதன் தொடர்ச்சியாக, மணிப்பூர் அரசியல் நிலவரம் தொடர்பான ஆலோசனையில் அமித் ஷா மீண்டும் ஈடுபடுவார் என்று தகவல் வெளியாகி உள்ளது.


## அரசு பேருந்துகளில்

# முன்பதிவு காலம் நீட்டிப்பு!

சென்னை, நவ. 19 –

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் முன்பதிவு காலம் 60 நாட்களில் இருந்து 90 நாட்களாக அதிகரிக்கப்படும் என TNSTC தகவல் தெரிவித்த நிலையில் நேற்று மதியம் 12 மணி முதல் அமல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாடு அரசு பேருந்துகளில் பொங்கல் பண்டிகைக்கான முன்பதிவு தொடங்கப்பட்டுள்ளது. தற்போது 2 மாதங்களுக்கு முன்னதாகவே முன்பதிவு செய்யும் நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பயணிகளிடமிருந்து கிடைத்த கருத்துகளின் அடிப்படையில், பயணிகள் நீண்ட காலத்திற்கு முன்பே பயணத் திட்டமிடலுக்கு ஏதுவாக, தற்போது முன்பதிவு நடைமுறையில் மாற்றம் என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் உள்ள 60 நாட்களுக்கு முன்னரே முன்பதிவு செய்யலாம் என்பதனை 90 நாட்கள் என உயர்த்தி 18 நவம்பர், 2024 மதியம் 12 மணி முதல் அமல்படுத்தப்படுகிறது.





பயணிகள் கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் TNSTC அதிகாரபூர்வ மொபைல் செயலி மூலம் முன்பதிவு செய்து சிரமமின்றி பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் தெரிவித்துள்ளது.